### புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான 6 மாதத்திற்குள்

# 9,000 கோடி ரூபாயில் டாடா வாகன உற்பத்தி ஆலை! 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு!

## இராணிப்பேட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, செப். 29 -**

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்ட ஆறு மாதத்திற்குள் ரூ.9,000 கோடி முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.09.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற் பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப் பதற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கை யிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றம் பெறுவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அமெரிக்க நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு 19 நிறுவனங்களு டன் ரூ.7616 கோடி முதலீட்டி ற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைக்கேற்ப, ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.

அந்த வகையில், எஃகு, தகவல் தொழில் நுட்பம், மோட்டார் வாகன உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் உலகளவில் சிறப்புடன் செயல்பட்டு வரும் டாடா குழுமத்தின் ஒரு அங்கமான டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தனது புதிய அதிநவீன மோட்டார் வாகன உற்பத்தி ஆலையை இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்க முன்வந்துள்ளது.

**அரசின் நடவடிக்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டு!**

இத்திட்டத்தில், 100 சதவிகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி, டாடா மோட்டார்ஸ் மற்றும் ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மார்ச் மாதம் இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்ட ஆறு மாதத்திற்குள், இத்திட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ள டாடா நிறுவனங்கள்!**

டாடா குழுமத்தின் துணை நிறுவனங்களான டிசிஎஸ், டைடன், டாடா பவர், டாடா எலெக்ட்ரானிக்ஸ் தாஜ் ஹோட்டல்கள் ஆகியவை ஏற்கெனவே தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். முனிரத்தி னம், ஜெ.எல். ஈஸ்வரப்பன் மற்றும் பி. கார்த்திகேயன், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய். சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில் ராஜ், வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் P.B.பாலாஜி, டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சைலேஷ் சந்திரா, JLR நிறுவனத்தின் இயக்குநர் ஃப்ராங்க் லட்விக் (Thiru Frank Ludwig) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.09.2024) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில், அத்தொழிற்சாலையின் மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முன்னாள் மேயர் **சிவராஜ்**
அவர்களின்
133ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்

முன்னாள் மேயர் **சிவராஜ்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
**மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,**
**துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,**
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 29.9.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி**
**இடம் : தங்கசாலை மணிக்கூண்டு அருகில், சென்னை**

செ.ம.தொ.இ/993/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை - 600 009.

StartupTN
PRESENTS



தமிழ்நாடு Startup திருவிழா

**தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**மாபெரும் தொழில் கனவு**
தமிழ்நாடு ஸ்டார்ட்-அப் திருவிழா
(28.9.2024 - 29.9.2024)

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
விழாப் பேருரை ஆற்றுவார்கள்

தலைமை
திரு. **தா.மோ. அன்பரசன்** அவர்கள்
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

சிறப்பு அழைப்பாளர்கள்
திரு. **பி. மூர்த்தி** அவர்கள்
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
முனைவர் **பழனிவேல் தியாகராஜன்** அவர்கள்
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
திருமதி **இந்திராணி பொன்வசந்த்** அவர்கள்
மேயர் - மதுரை மாநகராட்சி
திரு. **சு. வெங்கடேசன்** அவர்கள்
மதுரை - நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கோ. தளபதி** அவர்கள்
மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர்

**நாள் : 29.9.2024 ஞாயிற்றுக்கிழமை, மாலை 4.00 மணி**
**இடம் : தமுக்கம் மைதானம், மதுரை**

தொடங்கி வைக்கப்படும் திட்டங்கள்

- தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம் - 37 பயனாளிகளுக்கு ஒப்புதல் ஆணைகள் வழங்குதல்
- தமிழ்நாடு பட்டியலின/ பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் - 8 பயனாளிகளுக்கு முதலீட்டு ஒப்புதல் ஆணைகள் வழங்குதல்
- பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையம் - தொடக்கம்
- தொழில் நயம் வடிவமைப்பு மையம் - தொடக்கம்

இவ்விழாவில் தாங்கள் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

சிவராஜா ராமநாதன்
இயக்க இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்
தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்

அர்ச்சனா பட்நாயக் இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

செ.ம.தொ.இ / 994 / வரைகலை / 2024